## அறிமுகம்

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி உறுதியாக மீட்சி பெற்று பணவீக்கம் மிதமானதாகக் காணப்பட்டதோடு 2000ஆம் ஆண்டில் தொழில் வாய்ப்பின்மை மேலும் வீழ்ச்சியடைந்தது. இந்தப் பெறுபேறுகள் பெற்றோலிய இறக்குமதி விலைகளின் அதிகூடிய அதிகரிப்பு, அதிகரித்த தேசிய பாதுகாப்புச் செலவு, பாதகமான வானிலை நிலைமைகள் ஆகிய சாதகமற்ற மூன்று நிலைமைகளுக்கு எதிராக எய்தப் பெற்றமையின் காரணமாக இந்தப் பெறுபேறுகள் பாராட்டற்குரியனவாகும். எனினும், இவற்றின் பெருமளவு காரணமாக சென்மதி நிலுவையும் அரசதுறைப் பற்றாக்குறையும் மோசமடைந்தன. இதன் விளைவாக, அரசாங்கத்தினதும் அரச கூட்டுத்தாபனங்களினதும் உள்நாட்டு வங்கிக் கடன்பாடுகள் கடுமையாக அதிகரித்ததுடன் வெளிநாட்டு ஒதுக்குகள் வீழ்ச்சியடைந்து ரூபாவின் பெறுமதித் தேய்வுக்கான அழுத்தத்தை ஏற்படுத்திய வேளையில் வட்டி வீதங்கள் கணிசமான அளவு மேல் நோக்கி நகர்ந்தன. இந்த நிலைமையினைக் கட்டுப்படுத்துவதற்கான பொருத்தமான கொள்கை வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அரச செலவினங்களை ஒழுங்குமுறைப்படுத்தல், வருவாய் அதிகரிப்பு வழிமுறைகள் நிருவகிக்கப்பட்ட விலைகளின் மேல் நோக்கிய திருத்தம், ரூபாவின் சுயாதீன மிதப்பு, மற்றும் ஊக நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கான நிருவாக வழிமுறைகள் என்பனவற்றை இவை உள்ளடக்கியிருந்தன. வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை இப்பொழுது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதோடு அரசதுறைப் பற்றாக்குறையினைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. எனவே வட்டி வீதங்கள் வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 2001ஆம் ஆண்டில் சென்மதி நிலுவை மற்றும் வெளிநாட்டு ஒதுக்குகளில் நேர்மாற்றமொன்று எறிவு செய்யப்பட்டுள்ளது.

- ▲ 1999இன் இரண்டாம் அரைப் பகுதியில் தொடங்கிய பொருளாதார மீட்சி 2000ஆம் ஆண்டிலும் தொடர்ந்தது. இதன் விளைவாக பொருளாதார வளர்ச்சியானது கணிசமானதாகக் காணப்பட்டதோடு 1999இன் 4.3 சதவீத வளர்ச்சி யுடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் 6 சதவீத உயர் வளர்ச்சி பதிவு செய்யப்பட்டது. பொருளாதாரத்தின் அனைத்து முக்கிய துறைகளிலும் இந்த வளர்ச்சி பிரதிபலிக்கப்பட்டதோடு தயாரிப்பு மற்றும் பணிகள் துறைகளில் இது குறிப்பாகக் கூடுதலாகக் காணப் பட்டது.

- ▲ முதலீட்டு மட்டங்களும், தனியார் சேமிப்பு மட்டங்களும் 1999 இலிருந்து 2000ஆம் ஆண்டில் மேம்பாடடைந்தன.

- ▲ அதி உயர் பொருளாதார வளர்ச்சியும் முதலீட்டின் விரிவாக்கமும் தொழில் வாய்ப்புக்களின் உருவாக் கத்துக்கு இட்டுச் சென்றதுடன் தொழில் வாய்ப்பின்மை 8 சதவீதத் திற்கு வீழ்ச்சியடைந்தது.

- ▲ பன்னாட்டு விலைகளில் ஏற்பட்ட மாற்றமானது நிருவகிக்கப்பட்ட விலைகள் சிலவற்றில் அதிகரிப்பினைக் கட்டாயப்படுத்திய போதிலும் ஆண்டுப் பணவீக்கம் 6.2 சதவீதத்தில் கட்டுப்படுத் தப்பட்டது.

- ▲ 1999இன் தாழ்ந்த மட்டங்களிலிருந்து ஏற்றுமதிகளும் இறக்குமதிகளும் மீட்சி யடைந்தமையின் காரணமாக பன்னாட்டு வர்த்தகத்தில் உறுதியான வளர்ச்சி யொன்று காணப்பட்டது.

- ▲ ஏற்றுமதிகளின் அதிகரிப்பு, மற்றும் தனியார் துறை மாற்றல்கள் மற்றும் நிதியியல் கணக்குகள் என்பனவற்றின் ஊடான அதிகரித்த உட்பாய்ச்சல்களின் மத்தியிலும் முக்கியமாக அதிகரித்த எண்ணெய் விலைகள் மற்றும் பாது காப்புத் தொடர்பான பொருட்கள் என்பனவற்றின் அதிகரித்த செலவின் காரணமாக பொதுவான சென்மதி நிலுவைப் பற்றாக் குறையில் பாரிய அதிகரிப்பு ஒன்று ஏற்பட்டது.

- ▲ சென்மதி நிலுவயைில் காணப்பட்ட பற்றாக் குறையை ஈடுசெய்வதற்காக செய்யப்பட்ட வெளிநாட்டு நாணயங்களின் வெளிப் பாய்ச்சலானது நாட்டின் வெளிநாட்டு செலாவணி ஒதுக்குகளில் குறைப்பொன்றினை ஏற்படுத்தியது.

- ▲ அரசிறைத்துறையில் மோசமடையும் தன்மையொன்று காணப்பட்டது. குறிப்பாக பாதுகாப்புத் தொடர்பான அதிகரித்த செலவு

மற்றும் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க குறைவடைந்த அரசிறை என்பன அரசிறைப் பற்றாக் குறையில் அதிகரிப்பொன்றுக்கு இட்டுச்சென்றன. இவையும் தனியார் மயமாக்கப் பெறுகைகளில் காணப்பட்ட தாமதம் மற்றும் வெளிநாட்டு மூலங்களி லிருந்தான குறைந்த உட்பாய்ச்சல்கள் என்பனவும் உள்நாட்டு மூலங்களி லிருந்து பெருமளவு கடனினைப் பெறுவதற்கு அரசாங்கத்தினைக் கட்டாயப்படுத்தின.

- ▲ அதி உயர் அரச கடன்பாடுகளும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை யினை உறுதிப்படுத்துவதற்காக மத்திய வங்கியினால் அதனது வீதங்களில் மேற்கொள்ளப்பட்ட அதிகரிப்பும் வட்டி வீதங்கள் அதிகளவில் உயர் வடைவதற்குக் காரணமாயின.
- ▲ பண நிரம்பலின் அதிகரிப்பு குறைவாகக் காணப்பட்டமையினால் பணவீக்கத்தின் மீதான மேலதிக கேள்வி அழுத்தம் மிதமாக்கப்பட்டது.
- ▲ 2001 ஆம் ஆண்டில் பொருளாதாரம் மிதமான வளர்ச்சியொன்றினைப் பதிவு செய்யும் என எதிர் பார்க்கப் படுகின்றது. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு வழிமுறைகள் மேற்கொள்ளப்படும். அரசிறை, வெளிநாட்டு நடைமுறைக் கணக்குகளின் பற்றாக் குறைகள் குறைக்கப்படும். பொதுவான சென்மதி நிலுவை மிகையொன்றைக் காட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பல வழிமுறைகளின் மூலம் வெளிநாட்டு ஒதுக்குகள் அதிகரிக்கப்படும். அவற்றுள் சில ஏற்கனவே மேற் கொள்ளப்பட்டுள்ளன.